முழுப்பதிப்புரிமையுடையது

அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2020

## 45 - பரத நாட்டியம்

## புள்ளியிடும் திட்டம்

Department of Examinations - Sri Lanka




இது விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

# புள்ளி வழங்கும் திட்டம் - 2020

## 45 - பரதநாட்டியம்

## புள்ளி வழங்கும் திட்டம்

பரீட்சார்த்திகள் முதலாம் வினாவையும் வேறு நான்கு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையெழுதும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

வினாத்தாள் II இற்குரிய மொத்தப் புள்ளிகள் – **60 புள்ளிகள்**

**வினா இல:- 01**

கட்டாய வினா மொத்தப் புள்ளிகள் **மொத்தம் 12 புள்ளிகள்**

**வினா இல:- 02**

(i) பகுதி - 02 புள்ளிகள்
(ii) பகுதி - 04 புள்ளிகள்
(iii) பகுதி - 06 புள்ளிகள்
} **மொத்தம் 12 புள்ளிகள்**

**வினா இல:- 03**

(i) பகுதி - 02 புள்ளிகள்
(ii) பகுதி - 10 புள்ளிகள்
} **மொத்தம் 12 புள்ளிகள்**

**வினா இல:- 04**

(i) பகுதி - 03 புள்ளிகள்
(ii) பகுதி - 03 புள்ளிகள்
(iii) பகுதி - 03 புள்ளிகள்
(iv) பகுதி - 03 புள்ளிகள்
} **மொத்தம் 12 புள்ளிகள்**

**வினா இல:- 05**

பகுதிகள் இல்லை - **மொத்தம் 12 புள்ளிகள்**

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**வினா இல:- 06**

| | | | |
|---|---|---|---|
| (i) | பகுதி | - 04 புள்ளிகள் | **மொத்தம் 12 புள்ளிகள்** |
| (ii) | பகுதி | - 04 புள்ளிகள் | |
| (iii) | பகுதி | - 04 புள்ளிகள் | |

**வினா இல:- 07**

| | | | |
|---|---|---|---|
| (i) | பகுதி | - 05 புள்ளிகள் | **மொத்தம் 12 புள்ளிகள்** |
| (ii) | பகுதி | - 07 புள்ளிகள் | |

| | |
|---|---|
| **பத்திரம் I மொத்தப் புள்ளிகள்** | **40** |
| **பத்திரம் II மொத்தப் புள்ளிகள்** | **60** |
| | **100** |

**விசேட அறிவுறுத்தல் :** **ஒரு சரியான விடைக்கு 01 புள்ளி வீதம் மொத்தப் புள்ளிகள் 40 x 01 = 40, கீழ்க் குறிக்கப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளைப் பல்தேர்வு வினாப்பத்திரத்தின் இறுதியில் பதிக**

**சரியான விடைகளின் தொகை**

**பத்திரம் I இன் மொத்தப் புள்ளிகள்**

| |
|---|
| **40** |
| **40** |

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

## க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2020
## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடலுக்கான பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. சகல உதவிப் பரீட்சகர்களும் விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற மைப் பேனாவை பயன்படுத்தவும்.
2. பிரதம பரீட்சகர் ஊதாநிற மைப்பேனாவைப் பயன்படுத்த வேண்டும்.
3. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
4. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, ஒப்பம் இடவும்.
5. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பின்னங்களாக பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.
6. எண்கணித பரிசோதகர் புள்ளிகளைச் சரிபார்ப்பதற்கு நீல அல்லது கறுப்பு நிறமைப் பேனாவைப் பயன்படுத்த வேண்டும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ........................................................ ✓ 4/5
........................................................
........................................................

(ii) ........................................................ ✓ 3/5
........................................................
........................................................

(iii) ........................................................ ✓ 3/5
........................................................
........................................................

**மொத்தம்** ⟶ 10/15

**பல்தேர்வு விடைத்தாள்**

**1. துளைத்தாள் தயாரித்தல்**

I. புள்ளி வழங்கும் திட்டத்தின் படி சரியான தெரிவைத் துளைத்தாளில் அடையாளமிடவும்.

II அவ்வாறு அடையாளமிடப்பட்ட இடத்தை வெட்டி நீக்கித் துளைத்தாளைத் தயாரிக்கவும்.

III துளைத்தாளை விடைகளின் மீது சரியாக வைத்துக்கொள்ளக்கூடியதாகச் சுட்டெண் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான விடைகளின் எண்ணிக்கையைக் காட்டும் அடைப்பையும் வெட்டி நீக்கவும்.

IV சரியான, பிழையான விடைகளை குறிப்பிடக்கூடியதாக ஒவ்வொரு வரிசைக்கும் இறுதியில் வெற்று நிரையொன்றை வெட்டி ஏற்படுத்திக் கொள்ளவும்.

V **வெட்டிக்கொண்ட துளைத்தாளில் பிரதம பரீட்சகரிடம் கையொப்பம் பெற்று அங்கீகரித்துக் கொள்ளவும்.**


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.

3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை × அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் எழுதவும். அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும். புள்ளி பரிவர்த்தனை செய்யும் சந்தர்ப்பங்களில் பரிவர்த்தனை செய்யப்பட்ட புள்ளியை உரிய கூட்டினுள் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை மற்றும் கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். **பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.**
2. புள்ளிகளை குறிப்பிடும்போது ஓவலண்ட் கடதாசியின் வலது பக்க நிரலைப் பயன்படுத்தவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக **2 இலக்கங்களில் பதியவும்.** வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதவும்.

✶ **புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

I. ஒரு வினாப்பத்திரம் மாத்திரம் உள்ள பாடங்கள் தவிர ஏனைய சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது.

II. ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியான புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும்.

III. வினாப்பத்திரம் I இற்கான புள்ளி புள்ளிப்பட்டியலில் "**Total Marks**" என்ற நிரலில் **பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும்.**

IV. வினாப்பத்திரம் II இற்கான புள்ளிப் பட்டியலை தயார் செய்யும்போது பகுதிப் புள்ளிகளைப் பதிவதோடு வினாப்பத்திரம் II இன் இறுதிப் புள்ளிகளை புள்ளிப் பட்டியலில் "**Total Marks**" என்ற நிரலில் பதியவும்.

V. 43 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து **எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.**

VI. 21 - சிங்களமொழியும் இலக்கியமும், 22 - தமிழ்மொழியும் இலக்கியமும் ஆகிய இரு பாடங்களும் வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளி புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். வினாப்பத்திரம் II, III இற்கான பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி அவ் வினாப்பத்திரத்தின் மொத்தப் புள்ளிகளை, புள்ளிப்பட்டியலில் பதிய வேண்டும்.

**முக்கிய குறிப்பு :**

I. சகல சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் உரிய முழுப்புள்ளியானது முழுத்தானத்தில் புள்ளி பட்டியலில் பதியப்படுதல் வேண்டும். எந்தவிதமான காரணங்களிற்காகவும் வினாப்பத்திரத்தின் இறுதிப்புள்ளியானது தசம தானங்களில் பதியப்படலாகாது.

II. புள்ளிப் பட்டியலின் சகல பக்கங்களிலும் புள்ளிகளைப் பதிந்து உதவிப் பரீட்சகர், புள்ளிகளை சரிபார்த்த உதவிப் பரீட்சகர், மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் எண்கணித பரீட்சகர் மற்றும் பிரதம பரீட்சகர் தமது குறியீட்டு இலக்கத்தை எழுதி கையொப்பமிட்டு உறுதிப்படுத்துவது கட்டாயமாகும்.

○ ○ ○



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

## பல்தேர்வு வினாக்கள்
## புள்ளியிடும் போது கவனிக்க வேண்டிய அறிவுறுத்தல்கள்

- புள்ளிவழங்கும் திட்டத்தின்படி சரியான தெரிவைத் துளைத்தாளில் அடையாள மிடவும்.
- அவ்வாறு அடையாளமிடப்பட்ட இடத்தை பிளேட்டினால் வெட்டித் தாளைத் தயாரிக்கவும்.
- துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைத்துக் கொள்ளக்கூடியதாகச் சுட்டெண் அமைப்பையும் சரியான விடைகளின் எண்ணிக்கையைக் காட்டும் அடைப்பையும் வெட்டி நீக்கவும்.
- சரியான, பிழையான விடைகளைக் குறிப்பிடக்கூடியதாக ஒவ்வொரு தெரிவு வரிசைக்கும் இறுதியில் வெற்றுத்திரை ஒன்றை வெட்டி ஏற்படுத்திக் கொள்ளவும்.
- சரிபிழை அடையாளமிடுவதற்காக ஒவ்வொரு தெடரிவு வரிசைக்கும் அருகாமையில் வெற்றுத்திரையொன்றை வெட்டிக் கொள்ளவும்.
- வெட்டிக்கொண்ட துளைத்தாளில் பிரதம பரீட்சகரிடம் கையொப்பத்தினை பெற்று அங்கீகரித்துக் கொள்ளவும்.
- ஏதாவது வினாவிற்கும் ஒரு விடைக்கும் அதிகமாகக் குறிப்பிட்டு இருந்தாலோ, ஒரு விடைக்காவது குறிப்பிடலாம் இருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக் கூடியதாகக் கோடொன்றை வரையவும்.
- சில வேளையில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்து விட்டு வேறு விடைக்கு அவ்வாறு அழிந்தள்ளது நன்கு அழிக்கப்படாது விட்டிருப்பின் அத்தெரிவின் மீது கோடிடவும்.
- சரியான விடைகளின் தொகைகளைக் கூட்டி முழுப் புள்ளிக்குரிய அடைப்புக்குள் இடவும்.
- பிழையான விடைகளின் தொகைகளையும் அதற்குரிய அடைப்புக்குள் இடவும்.
- விடைத்தாள் பரீட்சகரின் குறியீட்டெண்ணும், ஒப்பமும் உரிய கோட்டில் எழுதல் வேண்டும்.

Department of Examinations - Sri Lanka


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**45 T I, II**

**අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2020**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2020**
**General Certificate of Education (Ord. Level) Examination, 2020**

භරත නැටුම් I, II
பரதநாட்டியம் I, II
Bharatha Dancing I, II

පැය තුනයි
*மூன்று மணித்தியாலம்*
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

## பரதநாட்டியம் I

**கவனிக்க :**

(i) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
(ii) 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
(iii) உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில், உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.
(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள ஏனைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றையும் பின்பற்றுக.

Department of Examinations - Sri Lanka

**1.** தியான ஸ்லோகத்திற்குரிய கடவுள்
(1) கணபதி (2) சிவன் (3) பார்வதி (4) முருகன்

**2.** நமஸ்காரம் செய்யும் போது அட்டதிக்குப் பாலகரை உணர்த்தும் ஹஸ்தம்
(1) கடகாமுகம் (2) சதுரம் (3) சிகரம் (4) அஞ்சலி

**3.** சம்யுத ஹஸ்தத்தில் 18 ஆவதாக அமைவது
(1) மற்சயம் (2) வராகம் (3) நாகபந்தம் (4) கூர்மம்

**4.** ஆதி தாளத்தில் அமைந்த அடவாக அமைவது
(1) தித் தெய்ந்த தா தெய் (2) தெய் தெய் திதி தெய் தா
(3) 2 ஆவது மண்டியடவு (4) 1 ஆவது தத்தெய் தாஹா

**5.** சங்கீர்ண நடையிலிருந்து சதுஸ்ர நடைக்குரிய சொற்கட்டினை நீக்கினால் வருவது
(1) திஸ்ரநடை (2) சதுஸ்ரநடை (3) கண்டநடை (4) மிஸ்ரநடை

**6.** பாய்தல் என்னும் பாதச் செய்கையானது
(1) மண்டலம் (2) பாதசாரிகா (3) பிரம்மரி (4) உத்பிளவனம்

**7.** 16 மொத்த அட்சர எண்ணிக்கையை எடுத்துக்கொள்ளும் தாளம்
(1) சதுஸ்ரஜாதி ஜம்பைதாளம் (2) மிஸ்ரஜாதி மட்டியதாளம்
(3) கண்டஜாதி திரிபுடைதாளம் (4) சங்கீர்ணஜாதி ரூபகதாளம்

**8.** தெருவினைக் கடப்பதற்குப் பிரயோகிக்கும் சிரோ, திருஷ்டி பேதங்கள் முறையே,
(1) துதம், ப்ரலோகிதம் (2) உத்வாகிதம், உள்ளோகிதம்
(3) கம்பிதம், ஸாசி (4) அதோமுகம், அவலோகிதம்


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**9.** பிரிவு என்பதைக் காண்பிக்கப் பிரயோகிக்கும் அசம்யுதஹஸ்தம்
(1) கடகாமுகம் (2) கர்த்தரீமுகம் (3) சுகதுண்டம் (4) அராளம்

**10.** பின்வருவனவற்றுள் சப்த தாளங்களிலும் காணப்படும் அங்கம்
(1) புளுதம் (2) த்ருதம் (3) லகு (4) அனுத்ருதம்

**11.** மலைப் பிரதேசங்களில் வாழ்பவர்கள் அப்பிரதேசங்களின் வழக்காறுகளைப் புகழ்ந்து பாடி ஆடும் கிராமிய நடனம்
(1) வேடுவ நடனம் (2) அரிவிவெட்டு நடனம்
(3) வாள் நடனம் (4) குறவன் குறத்தி நடனம்

**12.** பரத நாட்டியக் கச்சேரியின் போது பக்கவாத்தியக் கலைஞர்கள் மேடையில் அமர வேண்டியது
(1) நர்த்தகியின் இடது பக்கம் (2) மேடையின் முன்பக்கம்
(3) நர்த்தகியின் வலது பக்கம் (4) மேடையின் பின்பக்கம்

**13.** அவுணரை மயக்குவதற்காக திருமகள் ஆடிய கூத்து
(1) பாவைக் கூத்து (2) பேடிக் கூத்து (3) குடக் கூத்து (4) மற்கூத்து

**14.** "ஜவஹ் ஸ்ரத்துவம் ரேகாசப்..." எனத் தொடங்கும் ஸ்லோகம் குறிப்பிடப்படுவது
(1) கிண்கிணி இலட்சணம் (2) பாத்திரப் பிராணன்
(3) சபா இலட்சணம் (4) சபாநாயக இலட்சணம்

**15.** ஜாதி ஹஸ்தங்களிலொன்றான பிராமண ஹஸ்தத்தினை எடுத்துக்கொள்ளும் நவக்கிரக ஹஸ்தம்
(1) செவ்வாய் (2) சனி (3) வெள்ளி (4) வியாழன்

**16.** **போஜனே** என்பதன் கருத்து
(1) வாழைப்பூ (2) உணவு உண்ணுதல் (3) பூமாலை (4) கண்ணாடி

**17.** குடைவரைக் கோயில்கள் அமைக்கப்பட்ட காலம்
(1) சங்ககாலம் (2) சங்கமருவிய காலம்
(3) பல்லவர் காலம் (4) சோழர் காலம்

**18.** சிவபெருமான் காளியோடு ஆடிய தாண்டவம் குறித்து நிற்கும் தொழில்
(1) அருளல் (2) அழித்தல் (3) மறைத்தல் (4) காத்தல்

**19.** கருணா இரசத்திற்குரிய ஸ்தாயி பாவம்
(1) பயம் (2) கோபம் (3) ஆச்சரியம் (4) சோகம்

**20.** பெரு விரலையும் சுண்டு விரலையும் விரித்துப் பிடித்து ஏனைய விரல்களைச் சேர்த்துப் பிடித்தால் வரும் அசம்யுதஹஸ்தம்
(1) கம்ஸபக்ஷ்சம் (2) அர்த்தபதாகம் (3) மிருகசீர்ஷம் (4) திரிசூலம்

**21.** தெய் தெய் திதி தெய்; தா; இதிலுள்ள மொத்த அட்சரங்களின் எண்ணிக்கை
(1) 11 (2) 9 (3) 8 (4) 7

**22.** பின்வருவனவற்றுள் விரல்களில் கூடு அணிந்து கொண்டு வாசிக்கும் வாத்தியம்
(1) மிருதங்கம் (2) றபான் (3) தவில் (4) டோலக்

**23.** மெய்ப்பாட்டு உணர்வுகளினால் பாவத்தை வெளிப்படுத்தக்கூடியது
(1) ஆங்கிகா அபிநயம் (2) வாச்சிகா அபிநயம்
(3) ஆகார்யா அபிநயம் (4) சாத்விகா அபிநயம்

**24.** "பூஞ்சோலையில் பூக்கள் அழகாக மலர்ந்து இருந்தன." இதில் **மலர்ந்து** என்பதனை அபிநயிக்கப் பயன்படுத்தப்படும் ஹஸ்தம்
(1) அலபத்மம் (2) முகுளம் (3) காங்கூலம் (4) பத்மகோசம்

**25.** பஞ்ச பாணங்களில் மனவருத்தம், சோகம் ஆகியவற்றை உண்டாக்கக்கூடிய பாணம்
(1) அசோகப் பூ (2) மாம் பூ (3) முல்லைப் பூ (4) தாமரைப் பூ

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**26.** $|_7 |_7 \bigcirc \bigcirc$ எனும் அடையாளம் குறித்து நிற்கும் ஜாதி, தாளம் என்பன முறையே

(1) மிஸ்ரஜாதி, துருவதாளம் (2) சதுஸ்ரஜாதி, அடதாளம்
(3) திஸ்ரஜாதி, துருவதாளம் (4) மிஸ்ரஜாதி, அடதாளம்

**27.** வருணபகவானைக் காண்பிப்பதற்குப் பிரயோகிக்கும் தேவஹஸ்தம்

(1) வலது கை பதாகம், இடது கை சிகரம்
(2) வலது கை சிகரம், இடது கை பதாகம்
(3) வலது கை சிகரம், இடது கை அர்த்தபதாகம்
(4) வலது கை பதாகம், இடது கை முஷ்டி

**28.** இலங்கையில் **வெஸ்** என்னும் கிரீடம் அணிந்து ஆடப்படும் சாஸ்திரீய நடனம்

(1) றுகுணு நடனம் (2) சப்பிரகமுவ நடனம் (3) கண்டிய நடனம் (4) பஹத்தரட்ட நடனம்

**29.** பாதச் செய்கைகள் ஒரே மாதிரியாக அமைந்த இரண்டு வேறு அடவுகள்

(1) தத் தெய் தாஹா, தெய்யா தெய்யீ (2) கிடதக தரிகிடதொம், ததிங்கிண தொம்
(3) தாதெய் தெய்த, தத் தெய் தாம் (4) தெய்ஹத் தெய்ஹீ, திதி தெய்

**30.** சதங்கை அணிந்து வாரத்தில் ஒரு தடவை பகல் முழுவதும் ஆடிப்பழகும் கூத்து

(1) கிழமைக்கூத்து (2) தினக்கூத்து (3) அடுக்குப் பார்த்தல் (4) சட்டம்கொடுத்தல்

**31.** “சின்ன சின்ன பாதம் வைத்து கண்ணா நீ வா...” எனத் தொடங்கும் பாடல் வெளிப்படுத்துவது

(1) தாசி பாவம் (2) வாத்சல்ய பாவம் (3) பக்தி பாவம் (4) மதுர பாவம்

**32.** சேவலின் அசைவைக் குறிக்கும் வண்ணம்

(1) சவுளா வண்ணம் (2) நையடி வண்ணம் (3) துரக வண்ணம் (4) மயூர வண்ணம்

**33.** தாளம் ஆரம்பித்த பின்னர், இடையே பாட்டினையோ அல்லது ஜதியினையோ ஆரம்பித்தல்

(1) சம எடுப்பு (2) விசம எடுப்பு (3) அநாகத எடுப்பு (4) அதீத எடுப்பு

**34.** புல்லாங்குழலை இசைக்கப் பயன்படும் வாய்த்துளை குறிப்பது

(1) தாராந்திரம் (2) முகரந்திரம் (3) விரல் துளைகள் (4) மூடிய பகுதி

**35.** பின்வருவன கூத்துத் தொடர்பான சில விடயங்களாகும்.

A - காதல் சுவை சார்ந்த கதைகள்
B - பாரம் கூடிய உடைகள்
C - போர் சுவை சார்ந்த கதைகள்
D - விருத்தம் இழுத்துப் பாடப்படும்.
E - வட்டக்களரியில் கூத்து நிகழ்த்தப்படும்.

மேற்குறிப்பிட்டவற்றுள் **தென்மோடிக் கூத்து** தொடர்பான விடயங்களை மாத்திரம் கொண்ட தெரிவு

(1) A, B, E (2) A, D, E (3) C, B, D (4) C, D, E

- **36** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலுமுள்ள இடைவெளிக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

**36.** சிலப்பதிகாரத்திலே இளங்கோவடிகள் மிருதங்கத்தினை ________________ எனக் குறிப்பிடுகின்றார்.

(1) மத்தளம் (2) பிடில் (3) தண்ணுமை (4) வேணு

**37.** பாத்திர பகிப் பிராணன்களிலொன்று ________________ ஆகும்.

(1) தாளம் (2) ஆர்வம் (3) உறுதி (4) வேகம்

**38.** கலாஷேத்திரா நடனப் பள்ளியில் ________________ பாணியில் கற்பிக்கப்படுகின்றது.

(1) வழுவூரார் (2) பந்தணை நல்லூரார் (3) தஞ்சாவூரார் (4) காஞ்சிபுர

**39.** உடுக்கை, தம்பட்டம், முரசு, சேமக்கலம் என்பன ________________ இசைக்கருவிகளாகும்.

(1) மேலைத்தேய (2) சாஸ்திரீய (3) கிராமிய (4) ஹிந்துஸ்தானி

**40.** பரத நாட்டியத்தில் ஜதிகளைச் சொல்பவர் ________________ ஆவார்.

(1) அண்ணாவிமார் (2) நட்டுவனார் (3) வித்துவான் (4) வைணிகர்


Department of Examinations - Sri Lanka
Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

රහස්‍යයි
அந்தரங்கமானது

## අ.පො.ස. (සා.පෙළ) විභාගය - 2020
## க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2020

විෂය අංකය / பாட இலக்கம்: **45** විෂයය / பாடம்: **பரத நாட்டியம்**

### I පත්‍රය - පිළිතුරු
### I பத்திரம் - விடைகள்

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 11. | 4 | 21. | 1 | 31. | 2 |
| 02. | 3 | 12. | 3 | 22. | 3 | 32. | 1 |
| 03. | 4 | 13. | 1 | 23. | 4 | 33. | 3 |
| 04. | 1 | 14. | 2 | 24. | 1 | 34. | 2 |
| 05. | 3 | 15. | 4 | 25. | 3 | 35. | 2 |
| 06. | 4 | 16. | 2 | 26. | 4 | 36. | 3 |
| 07. | 2 | 17. | 3 | 27. | 1 | 37. | 1 |
| 08. | 1 | 18. | 1 | 28. | 3 | 38. | 2 |
| 09. | 2 | 19. | 4 | 29. | 2 | 39. | 3 |
| 10. | 3 | 20. | 3 | 30. | 1 | 40. | 2 |

Department of Examinations - Sri Lanka

විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் } එක් පිළිතුරකට ලකුණු / ஒரு சரியான விடைக்கு **01** බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் **01 × 40 = 40**

---

පහත නිදසුනෙහි දැක්වෙන පරිදි බහුවරණ උත්තරපත්‍රයේ අවසාන තීරුවේ ලකුණු ඇතුළත් කරන්න.
கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளை பல்தேர்வு விடைப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

නිවැරදි පිළිතුරු සංඛ්‍යාව / சரியான விடைகளின் தொகை: 25 / 40

I පත්‍රයේ මුළු ලකුණු / பத்திரம் I இன் மொத்தப்புள்ளி: 25 / 40


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

# வினாத்தாளின் குறிக்கோள் பற்றிய அறிமுகம்

## முதலாம் பகுதி வினாவுக்கான குறிக்கோள்கள்

1. தியான ஸ்லோகத்திற்குரிய கடவுள் யார் என்பதனைத் தெரிந்து கொள்வர்.

2. நமஸ்காரம் செய்யும்போது அட்டதிக்குப் பாலகரை உணர்த்தும் ஹஸ்தம் பற்றித் தெரிந்து கூறுவர்.

3. சம்யுத ஹஸ்தத்தில் 18 ஆவதாக அமையும் ஹஸ்தம் பற்றிக் தெரிந்து கொள்வர்.

4. வழங்கப்பட்ட அடவுகளில் ஆதி தாளத்தில் அமைந்த அடவினைத் தெரிந்து கொள்வர்.

5. சங்கீர்ண நடையிலிருந்து சதுஸ்ர நடைக்குரிய சொற்கட்டினை நீக்கினால் வரும் நடையினைத் தெரிந்து கொள்வர்.

6. பாய்தல் என்னும் பாதச் செய்கையின் பெயரினைத் தெரிந்து கொள்வர்.

7. 16 மொத்த அட்சர எண்ணிக்கையினை எடுத்துக் கொள்ளும் தாளம் பற்றித் தெரிந்து கொள்வார்.

8. தெருவினைக் கடப்பதற்கு பிரயோகிக்கும் சிரோ, திருஷ்டி பேதங்களை முறையே குறிப்பிடத் தெரிந்து கொள்வர்.

9. “பிரிவு” என்பதைக் காண்பிக்கும் அம்யுத ஹஸ்தம் பற்றித் தெரிந்து கொள்வர்.

10. சப்த தாளங்களிலும் காணப்படும் அங்கம் பற்றித் தெரிந்து கொள்வர்.

11. மலைப் பிரதேசங்களில் வாழ்பவர்கள் அப் பிரதேசங்களின் வழக்காறுகளைப் புகழ்ந்து பாடி ஆடும் கிராமிய நடனம் பற்றித் தெரிந்து கொள்வர்.

12. பரத நாட்டியக் கச்சேரியின்போது பக்கவாத்தியக் கலைஞர்கள் மேடையில் அமர வேண்டிய இடம் பற்றித் தெரிந்து கொள்வர்.

13. அவுணரை மயக்குவதற்காக திருமகள் ஆடிய கூத்து பற்றித் தெரிந்து கொள்வர்.

14. “ஜவஹ் ஸரத்துவம் ரேகாசப்....” எனத் தொடங்கும் ஸ்லோகம் பற்றித் தெரிந்து கொள்வர்.

15. ஜாதி ஹஸ்தங்களிலொன்றான பிராமண ஹஸ்தத்தினை எடுத்துக் கொள்ளும் நவக்கிரக ஹஸ்த்தினை அறிந்து கொள்வர்.

16. போஜனே என்பதன் கருத்தினை தெரிந்து கொள்வர்.

17. குடைவரை கோயில் அமைக்கப்பட்ட காலத்தினை தெரிந்து கொள்வர்.

18. சிவபெருமான் காளியோடு ஆடிய தாண்டவம் குறித்து நிற்கும் தொழிலை தெரிந்து கொள்வர்.

19. கருணா இரசத்திற்குரிய ஸ்தாயி பாவத்தினை தெரிந்து கொள்வர்.

20. பெரு விரலையும் சுண்டு விரலையும் விரித்தப் பிடித்து ஏனைய விரல்களை சேர்த்துப் பிடித்தால் வரும் அஸம்யுத ஹஸ்தத்தினை அறிந்து கொள்வர்.

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

21. தெய் தெய் திதி தெய்; தா; இதிலுள்ள மொத்த மாத்திரைகளின் எண்ணிக்கையினை தெரிந்து கொள்வர்.

22. விரல்களில் கூடு அணிந்து கொண்டு வாசிக்கும் வாத்தியம் எது என்பதினை தெரிந்து கொள்வர்.

23. மெய்ப் பாட்டு உணர்வுகளினால் பாவத்தை வெளிப்படுத்தக் கூடிய அபிநயத்தினை தெரிந்து கொள்வர்.

24. பூக்கள் மலர்ந்து இருந்தன என்பதில் வரும் “மலர்ந்து” என்பதனை அபிநயிக்கப் பயன்படுத்தும் ஹஸ்தத்தினை தெரிந்து கொள்வர்.

25. பஞ்ச பாணங்களில் மனவருத்தம், சோகம் ஆகியவற்றை உண்டாகக்கக்கூடிய பாணத்திணை அறிந்து கொள்வர்.

26. $1_7 1_7 00$ எனும் அடையாளம் குறித்து நிற்கும் ஜாதி, தாளம் என்பவற்றின் முறைமையினை தெரிந்து கொள்வர்.

27. வருண பகவானைக் காண்பிக்கப் பிரயோகிக்கும் தேவஹஸ்தத்தினை தெரிந்து கொள்வர்.

28. இலங்கையில் வெஸ எனும் கிரீடம் அணிந்து ஆடப்படும் சாஸ்திரிய நடனத்தினை அறிந்து கொள்வர்.

29. பாதச் செய்கைகள் ஒரே மாதிரியாக அமைந்த இரண்டு வேறு அடவுகளை தெரிந்து கொள்வர்.

30. சதங்கை அணிந்து வாரத்தில் ஒரு தடவை பகல் முழுவதும் ஆடிப் பழகும் கூத்து எது என்பதினை அறிந்து கொள்வர்.

31. “சின்ன சின்ன பாதம் வைத்து கண்ணா நீ வா..” எனத் தொடங்கும் பாடல் வெளிப்படுத்தும் பாவத்தினை அறிந்து கொள்வர்.

32. சேவலின் அசைவைக் குறிக்கும் வண்ணம் எது என்பதினை தெரிந்து கொள்வர்.

33 தாளம் ஆரம்பித்த பின்னர் இடையே பாட்டினையோ அல்லது ஜதியினையோ ஆரம்பித்தலுக்குரிய பெயரினை அறிந்து கொள்வர்.

34. புல்லாங்குழலை இசைக்கப் பயன்படுத்தும் வாய்த்துளையின் பெயரினை அறிந்து கொள்வர்.

35. தென்மோடிக் கூத்து தொடர்பான விடயங்களை அறிந்து கொள்வர்.

36. சிலப்பதிகாரத்திலே இளங்கோவடிகள் மிருதங்கத்தினை எவ்வாறு குறிப்பிடுகிறார் என்பதனை தெரிந்து கொள்வர்.

37. பாத்திர பகி பிராண்ன்களில் ஒன்றினை தெரிந்து கொள்வர்.

38. கலாஷேத்திரா நடனப் பள்ளியில் கற்பிக்கப்படும் பாணியினை அறிந்து கொள்வர்.

39. உடுக்கை, தம்பட்டம், முரசு, சேமக்கலம் என்பன எவ்வகையான இசைக்கருவிகள் என்பதனை தெரிந்து கொள்வர்.

40. பரத நாட்டியத்தில் ஜதிகளைச் சொல்பவருக்குரிய பெரினை அறிந்து கொள்வர்.


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Department of Examinations - Sri Lanka

## பகுதி II

**முதலாம் வினாவுக்கான குறிக்கோள்கள்**

i. ஜதீஸ்வரக் கோர்வைகளுக்கிடையில் வரும் அடவினைத் தெரிந்து கொள்வர்.

ii. சதுஸ்ர ஜாதி திரிபுடதாளத்தின் மறு பெயரினை தெரிந்து கொள்வர்.

iii. முனி தாண்டவம் ஆடப்பட்ட தலத்தினை அறிந்து கொள்வர்.

iv. இடது கையிலுள்ள நாடாவை அழுத்திப்பிடிக்கும்போது சுருதி கூடி ஒலிக்கும் வாத்தியம் பற்றித் தெரிந்து கொள்வர்.

v. நாட்டிய நாடகங்களைத் தமிழில் இயற்றியவரது பெயரினைத் தெரிந்து கொள்வர்.

vi. உறவு முறைகளைக் குறிக்கும் ஹஸ்தத்தின் பெயரினை அறிந்து கொள்வர்.

vii. கைகளில் ஏதேனும் பொருட்களை ஏந்தி ஆடும் நடனத்திற்குரிய பெயரினை அறிந்து கொள்வர்.

viii. வட இந்தியாவிற்குரிய சாஸ்திரீய நடனம் பற்றித் தெரிந்து கொள்வர்.

ix. நட்டுவாங்கத் தாளத்திலே வலது குமிழ், இடது குமிழ் குறிக்கும் தேவதைகளை முறையே எழுதத் தெரிந்து கொள்வர்.

x. வர்ணம் என்னும் உருப்படியில் காணப்படும் இரு பெரும் பிரிவுகளை அறிந்து கொள்வர்.

Department of Examinations - Sri Lanka

**இரண்டாம் வினாவுக்கான குறிக்கோள்கள்**

i. நாட்டியக் கச்சேரி அமைப்பு முறையில் முதன் முதலில் இடம் பெறும் நிருத்திய உருப்படி பற்றித் தெரிந்து கொள்வர்.

ii. அவ் உருப்படியின் இலட்சணம் பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்வர்.

iii. அவ் உருப்படியில் இடம்பெறும் முதலாவது கண்டிகையினை இசைக் குறியீட்டுடன் எழுதுவதற்குத் தெரிந்து கொள்வர்.

**மூன்றாம் வினாவுக்கான குறிக்கோள்கள்**

i. தென்னிந்தியாவிலே கேரள மாநிலத்திலே தோற்றம் பெற்ற இரண்டு சாஸ்திரீய நடனங்களைத் தெரிந்து கொள்வர்.

ii. அவற்றிலே சிருங்கார ரசத்தினையும் லாஸ்யத்தினையும் முக்கியத்துவமாக வெளிப்படுத்தும் நடனம் பற்றி முழுமையாக தெரிந்து கொள்வர்.

**நான்காவது வினாவுக்கான குறிக்கோள்கள்**

i. முஸ்டி ஹஸ்த விநியோகத்தினையும் அதன் கருத்தினையும் முழுமையாக எழுதுவதற்குத் தெரிந்து கொள்வர்.

ii. தாமரசூடஹஸ்த விநியோகத்திற்கான ஸ்லோகத்தினையும் அதன் கருத்தினையும் எழுதத் தெரிந்து கொள்வர்.


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

iii. அஞ்சலி ஹஸ்தத்திற்குரிய ஸ்லோகத்தினையும் அதன் கருத்தினையும் தெரிந்து எழுதிக் கொள்வர்.

iv. கட்வா ஹஸ்தத்திற்குரிய ஸ்லோகத்தினையும் அதன் கருத்தையும் எழுதத் தெரிந்த கொள்வர்.

**ஐந்தாவது வினாவுக்கான குறிக்கோள்கள்**

பந்தணை நல்லூர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் தோற்றம், கலைக்காற்றிய பணி என்பவற்றை அறிந்து கொள்வர்.

**ஆறாவது வினாவுக்கான குறிக்கோள்கள்**

i. முத்திரை பற்றி சிறு குறிப்பு எழுத தெரிந்து கொள்வர்.

ii. சிஷ்ய இலட்சணம் பற்றி எழுதத் தெரிந்து கொள்வர்.

iii. அலாரிப்பின் இலட்சணம் பற்றி எழுதத் தெரிந்து கொள்வர்.

**ஏழாவது வினாவுக்கான குறிக்கோள்கள்**

i. தேயிலைக் கொழுந்து நடனத்தின் தோற்றம், ஆடல், பாடல், ஒப்பனை, ஆடை, அணிகலன்கள், இசைக்கருவிகள் பற்றித் தெரிந்து கொள்வர்.

ii. மாணவர் தாம் பார்த்து இரசித்த தேயிலைக் கொழுந்து நடனம் பற்றி விளக்கமாக எழுத தெரிந்து கொள்வர்.

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

# பரத நாட்டியம் II

1. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடை எழுதுக.
   (i) ஜதீஸ்வரக் கோர்வைகளுக்கிடையே, மெருகூட்டுவதற்காக ஆடப்படும் அடவு எது?
   (ii) சதுஸ்ரஜாதி திரிபுட தாளத்தின் மறுபெயர் யாது?
   (iii) நடராஜப் பெருமான் முனி தாண்டவம் ஆடிய இடம் எது?
   (iv) நடுவிலுள்ள நாடாவை இடது கையினால் அழுத்திக்கொடுக்கும்போது சுருதி அதிகமாகி ஒலிக்கும் வாத்தியம் எது?
   (v) யக்ஷகான நாட்டிய நாடகங்களை இயற்றியவர் யார்?
   (vi) உறவுமுறைகளை அபிநயிப்பதற்கு பயன்படுத்தப்படும் ஹஸ்தங்களை எவ்வாறு அழைப்பர்?
   (vii) கைகளில் ஏதேனும் பொருட்களை ஏந்தி ஆடும் நடனத்தினை எவ்வாறு அழைப்பர்?
   (viii) வட இந்தியாவிற்குரிய சாஸ்திரீய நடனம் எது?
   (ix) நட்டுவாங்கத் தாளத்தில் வலது குமிழ், இடது குமிழ் குறித்து நிற்கும் அதிதேவதைகளை முறையே எழுதுக.
   (x) வர்ணம் என்னும் உருப்படியில் காணப்படும் இரு பகுதிகளும் எவை?

(i) மெய்யடவு **(01 புள்ளி)**

(ii) ஆதிதாதளம் **(01 புள்ளி)**

(iii) திருநெல்வேலி **(01 புள்ளி)**

(iv) உடுக்கு / துடி **(01 புள்ளி)**

(v) கிரிராஜ கவி **(01 புள்ளி)**

(vi) பாந்தவ்யஹஸ்தம் **(01 புள்ளி)**

(vii) ஏந்தல் நடனம் **(01 புள்ளி)**

(viii) கதக் **(01 புள்ளி)**

(ix) இலட்சுமி, சரஸ்வதி **(02 புள்ளிகள்)**

(x) பூர்வாங்கம், உத்திராங்கம் **(02 புள்ளிகள்)**

**மொத்தம் 12 புள்ளிகள்**

Department of Examinations - Sri Lanka

2. (i) பரத நாட்டியக் கச்சேரி அமைப்பு முறையில் முதன் முதலாக இடம்பெறும் நிருத்திய உருப்படி எது?
   (ii) மேலே (i) இல் குறிப்பிட்ட உருப்படியின் இலட்சணத்தினை எழுதுக.
   (iii) மேலே (i) இல் குறிப்பிட்ட உருப்படியின் இராகம், தாளம் என்பவற்றைக் குறிப்பிட்டு, அதன் முதலாவது கண்டிகையினை இசைக் குறியீட்டுடன் எழுதுக.

(i) சப்தம் **(02 புள்ளிகள்)**

(ii)
- ✔ உருப்படி வரிசையில் மூன்றாவதாக இடம்பெறும் உருப்படியாகும்
- ✔ முதன் முதலில் அபிநயம் தோற்றுவிக்கப்படும் உருப்படி ஆகும்.
- ✔ சப்தம் என்றால் “சொல்” என்று பொருள்படும்.
- ✔ அர்த்தம் நிறைந்த சாகித்தியமும், சிறு ஜதிக் கோர்வைகளும் இணைந்த உருப்படி ஆகும்.
- ✔ தெய்வங்கள் மீதும், அரசர்கள் மீதும் இயற்றி அமைக்கப்பட்டிருக்கும் உருப்படி ஆகும்.
- ✔ மிஸ்ரசாபு தாளத்திலும், இராக மாளிகையாகவும் அமைக்கப்பட்ட உருப்படியாகும்.


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

- ✔ பாடல் வரிகள் கண்டிகைகளாக அமைக்கப்பட்டிருக்கும்.
- ✔ பராக், சலாமுரே நமோஸ்துதே என பாடல் வரி முடிவடைந்து காணப்படும்.
- ✔ இதன் வகைகளாக கிருஷ்ண சப்தம், மண்டுக சப்தம், கோதண்டராம சப்தம், சண்முக சப்தம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.
- ✔ பக்தி சிருங்காரம் நிறைந்த உருப்படி ஆகும்.
- ✔ திரு க. பொன்னையாப்பிள்ளை, வடிவேலு போன்றோர் இயற்றி உள்ளனர்.

**(04 புள்ளிகள்)**

(iii) **இராகம் : இராகமாலிகை**

**தாளம் : மிஸ்ரசாபு**

- ✔ முதலாம் கண்டிகை
  இராகம் : காம்போதி

| | | | |
|---|---|---|---|
| ; தா தெய், | = | யா ; தெய், யும், | // |
| தா ; த, | = | தாம் ; ; ; | // |
| தளாங்கு தொம், | = | ; ததிங்,கிண தொம் | // |
| த, த, ண, | = | தந், ; த, ண, | // |
| த, ஜொ, ணு, | = | ஜொ, ணு, தி, மி, | // |
| த, தோம் ; | = | த, ன, கி, ட, | // |
| த, தி, மி, | = | தி, மி, கி, ட, | // |
| ; தா தெய், | = | யா ; தெய், யும், | // |
| தா ; த, | = | தாம் ; ; ; | // |
| ஆ ; ; | = | ஆ ; ; ; | // |
| ஆயர் | = | சேரியர் | // |
| அறிந்தி | = | டாமலும் | // |
| ; அன்னை | = | தந்தையர் | // |
| ; தெரிந்தி | = | டாமலும் | // |
| ; நேயர் | = | கோபியர் | // |
| ; நெஞ்சம் | = | கவர்ந்திட | // |
| ; மாய | = | வன் குழல் | // |

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

ஊது = றான் ; ; ; //

ஆ ; ; = ஆ ; எங்கள் //

யாத = வன் குழல் //

ஊது = றான் ; ; ; //

ஆ ; ; = ஆ ; ; ; //

✔ காம்போதி

; தா தெய், = யா ; தெய், யும், //

தா ; த, = தாம் ; ; ; //

தளாங்கு தொம், = ; ததிங்,கிண தொம் //

த, த, ண, = ஜெம் ; ; தரி, //

ஜெம், ; த, = நம், ; த, ரி, //

த, த, ண, = ஜெம் ; ; தரி, //

ஜெம், ; த, = தீம், ; த, க, //

; தா தெய், = யா ; தெய், யும், //

தா ; த, = தாம் ; ; ; //

தண்டை = முழங்க ச //

தங்கை = கிலுங்க த //

வழ்ந்து = வரும் முரு //

கா , = .. தமிழ் //

தாலாட்டுப் = பாட்டினில் //

குழந்தை = யாய் என்முன் //

; தாவி = வரும் முரு //

கா .., ; = ........... //

**(06 புள்ளிகள்)**

**(விடைக்கேற்ப புள்ளி வழங்கவும் )**

**மொத்தம் 12 புள்ளிகள்**

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**3.** (i) கேரள மாநிலத்தில் தோற்றம் பெற்ற இரண்டு சாஸ்திரீய நடனங்களைக் குறிப்பிடுக.
(ii) மேலே (i) இல் குறிப்பிட்ட சாஸ்திரீய நடனங்களுள் சிருங்கார ரஸத்தினையும் லாஸ்யத்தினையும் முக்கியம்சமாகக் கொண்டு வெளிப்படுத்தும் நடனம் பற்றிப் பின்வரும் அடிப்படையில் விளக்குக.
- தோற்றம்
- நடன, இசையமைப்பு
- பயன்படுத்தப்படும் இசைக்கருவிகள்
- ஆடை, அணிகலன்கள்
- பங்களிப்புச் செய்த கலைஞர்கள்

(i) ✔ கதகளி

✔ மோகினியாட்டம் **(02 புள்ளிகள்)**

(ii) **தோற்றம்**

✔ மோகினியாட்டம் தென்னிந்தியாவின் கேரளா மாநிலத்திற்குரிய ஆடல் ஆகும்.

✔ ஸ்வாதித் திருநாள் மகாராஜா, தஞ்சை நால்வருள் ஒருவரான வடிவேலு என்பவர்கள் இணைந்து இந் நாட்டியத்தினைக் கொண்டு வந்தனர்.

✔ திருமால், மோகினி அவதாரம் எடுத்து காண்போரை வியக்கும் வண்ணம் மனம் மயங்கச் செய்தமையால், “மோகினி ஆட்டம்” என்று அழைக்கப்படுகிறது.

**நடன, இசையமைப்பு**

✔ மோகினி ஆட்டம் பரத நாட்டியம், கதகளி ஆகியவற்றின் செயல் முறைகளைக் கொண்டு வடிவமைக்கப்பட்டது.

✔ கதகளி நடனத்தில் பாதங்களை அகட்டி வைத்து ஆடுவதைப் போல, மோகினி ஆட்டமும் ஆடப்படுகிறது.

✔ சிருங்கார ரஸத்தையும் லாஸ்யத்தையும் முக்கிய அம்சமாகக் கொண்டுள்ளது.

✔ பரத நாட்டியத்தின் நாட்டிய உருப்படிகள் போல ஜதீஸ்வரம், சப்தம், வர்ணம், பதம் சொற்கட்டு போன்ற உருப்படிகள் மோகினியாட்டத்தில் ஆடப்படுகின்றன.

✔ மோகினியாட்டத்தில் “பந்தாட்டம்” விசேடமாக ஆடப்படும்.

✔ அடவுக் கோர்வைகளும் அபிநயமும் இடம் பெற்று அழகிய லாஸ்யமாக ஆடப்படுகின்றது.

✔ மோகினி ஆட்டத்தில் அதிபங்கநிலை பயன்படுத்தப்படுகிறது.

✔ இசை, சோபான இசையுடன் கர்நாடக சாஸ்திரிய இசையும் பயன்பாட்டில் உள்ளது.


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Department of Examinations - Sri Lanka

**பயன்படுத்தப்படும் இசைக் கருவிகள்**

- ✔ பரத நாட்டியத்தைப் போலவே மோகினி ஆட்டத்திற்கும் இசைக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.

- ✔ மிருதங்கம்
  வயலின்
  செண்டை
  மத்தளம்
  எடக்கை போன்ற வாத்தியங்கள்

**ஆடை, அணிகலன்கள்**

- ✔ வெள்ளை நிற ஆடையில், பொன்னிற வண்ண முகதலைகளைக் கொண்ட, அதிக விசிறி மடிப்புடன் கூடிய அழகிய ஆடை பயன்படுத்தப்படுகின்றன.

- ✔ தலையில் உயரமாக கொண்டை ஒரு பக்கத்திற்கு போடப்பட்டு வெண்ணிற மலர் சுற்றி வட்டமாக அலங்கரிக்கப்படுகின்றது.

- ✔ பொன்னிற நகைகளும், காசு மாலையும், ஒட்டியாணம், வளையல்கள், சலங்கைகளும் அணியப்படும்.

**பங்களிப்புச் செய்த கலைஞர்கள்**

- ✔ கிருஷ்ண பணிக்கர் என்பவரால் இக் கலை வளர்க்கப்பட்டது.

- ✔ இவரிடம் கல்யாணி அம்மா, மாதவி, சின்னம்மு, ராகினிதேவி, தங்கமணி ஆகியோர் கற்றனர்.

- ✔ தற்போது புகழ் பெற்ற மோகினி ஆட்டக் கலைஞர்கள்,
  சாந்தா ராவ்
  மிருணாளினி சாராபாய்,
  கனெகறெலே போன்றோரைக் குறிப்பிடலாம்.

**(10 புள்ளிகள்)**

**( ஒவ்வொரு தலைப்புக்கும் 02 புள்ளிகள் வீதம் வழங்கவும். )**

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**4.** பின்வரும் ஹஸ்தங்களுக்குரிய விநியோகங்களை ஸ்லோகத்துடனும் அதன் கருத்துடனும் எழுதுக.
(i) முஷ்டி ஹஸ்தம் (ii) தாம்ரசூட ஹஸ்தம்
(iii) அஞ்சலி ஹஸ்தம் (iv) கட்வா ஹஸ்தம்

(i) **முஷ்டி ஹஸ்த விநியோகம்**

சுலோகம் :-

ஸ்திரே கஜக்கிரகே தார்டியே வஸ்துவாதீனாம்ச தாரணே /

மல்லானாம் யுத்த பாவேபி முஷ்டி ஹஸ்தோய மிஷ்யதே //

கருத்து :-

| | | |
|---|---|---|
| ஸ்திரே | – | உறுதி, ஸ்திரத் தன்மை |
| கஜக்கிரகே | – | தலைமுடியைக் கோதி முடிதல் |
| தார்டியே | – | தைரியம் |
| வஸ்துவாதீனாம்ச தாரணே | – | பொருட்களை பிடித்தல் |
| மல்லானாம் யுத்த பாவேபி | – | மல்லர்களின் யுத்தம் |
| முஷ்டி ஹஸ்தோய மிஷ்யதே | – | இவை முஷ்டி ஹஸ்த விநியோகங்களாகும். |

**(03 புள்ளிகள்)**

(ii) **தாம்ரசூட ஹஸ்த விநியோகம்**

சுலோகம் :-

குக்குடாதெள பகே காகே ஒஷ்ட்ரே வத்தேச லேகனே /

யுஜ்யதே தாம்ர சூடாக்ய கரோ பரதவே திபிஹி //

கருத்து :-

| | | |
|---|---|---|
| குக்குடாதெள | – | சேவல் |
| பகே | – | கொக்கு |
| காகே | – | காகம் |
| ஒஷ்ட்ரே | – | ஒட்டகம் |
| வத்தேச | – | கன்றுக்குட்டி |
| லேகனே | – | எழுதுகோல் |

**(03 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

(iii) **அஞ்சலி ஹஸ்த விநியோகம்**

சுலோகம் :–

தேவதா குரு விப்ராணாம் நமஸ்காரே ஸ்வனுக்ரமாத் /

கார்யஹ் ஷிரோ முகோ ரஸ்தோ விநியோகோஞ்சலிர் புதஹி //

கருத்து :–

தெய்வம், ஆசிரியர், பிராமணர் முதல் தாய் தந்தை முதலியோருக்கும் பெரியவர்களுக்குமாக அஞ்சலியை முறையே தலை, நெற்றி, மார்பு ஆகிய இடங்களில் பிடிக்க வேண்டும்.

**(03 புள்ளிகள்)**

(iv) **கட்வா ஹஸ்த விநியோகம்**

சுலோகம் :–

கட்வா ஹஸ்தோ பவேதேஷ கட்வா ஷிபிகயோ ஸ்மிருதஹ //

கருத்து :–

கட்வா – கட்டில்

ஷிபிகயோ – பல்லாக்கு

**(03 புள்ளிகள்)**

**மொத்தம் 12 புள்ளிகள்**

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**5.** பந்தணை நல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களின் வாழ்க்கை வரலாற்றினைக் குறிப்பிட்டு, அவர் கலைக்காற்றிய பங்களிப்பை விவரித்து எழுதுக.

- ✔ தஞ்சை மாவட்டத்திலுள்ள கும்பகோணம் என்னும் ஊரிலுள்ள பந்தணை நல்லூர் என்னும் கிராமத்தில் 1869 ஆம் ஆண்டு பிறந்தார்.
- ✔ இவரது தந்தையார் சூரிய மூர்த்தி, தாயார் தஞ்சை பொன்னையாவின் புத்திரி ஞானாம்பாள்.
- ✔ இவர் தமிழ் மொழியை இராமலிங்க வாத்தியாரிடமும் தெலுங்கு மொழியை வெங்கடசாமி வாத்தியாரிடமும், சமஸ்கிருத மொழியை ஆடுதுறை அறிஞர் குப்புசாமி கனகபாடிகளிடமும் கற்றார்.
- ✔ தனது 12 ஆவது வயதிலே தஞ்சாவூர் சபாபதி நட்டுவனாரிடமும் மாமனார் மகாதேவ நட்டுவனாரிடமும் நாட்டியத்தைப் பயின்றார்.
- ✔ இவர் இளமையிலேயே இசை வல்லுனராகவும் வயலின் வித்துவானாகவும் விளங்கினார்.
- ✔ வாய்ப்பாட்டிசை, வாத்திய இசை, நட்டுவாங்கப் பயிற்சியில் சிறப்புப் பெற்றார்.
- ✔ பொருத்தமான அடவுகளைக் கொண்டு தீர்மானங்களை உருவாக்குவதில் நிகரற்றவர்.
- ✔ நாட்டியக் கலை மறுமலர்ச்சி அடையாதபோது தேவதாஸி குடும்பங்களைச் சேர்ந்த இளம் பெண்களுக்கு நாட்டியமும் ஆண்களுக்கு நட்டுவாங்கமும் கற்பித்தார்.
- ✔ நாட்டிய இசை உருப்படிகளான ஜதீஸ்வரம், வர்ணம், பதம், கீர்த்தனை என்பவற்றை இயற்றினார்.
- ✔ தமிழில் 30 க்கும் மேற்பட்ட கீர்த்தனைகளை இயற்றியுள்ளார்.
- ✔ 1943 ஆம் ஆண்டு எழும்பூர் ஜகந் நாத சபா இவருக்கு "நாட்டியக் கலாநிதி" பட்டம் வழங்கியது.
- ✔ தமிழ்நாடு 1948 ஆம் ஆண்டில் கும்பகோணத்தில் பாராட்டுப் பத்திரமும் பொற்கிழியும் வழங்கியது.
- ✔ இவரது இறுதிக் காலம் வரை எழும்பூர் லலித கலை மன்றத்தின் கௌரவ முதல்வராக இருந்தார்.
- ✔ இவர் ஒரு சிறந்த சிவபக்தர் இவரை அன்புடன் "தாத்தா" என அழைத்தனர். இவரைப் பரத நாட்டிய "குல குரு" எனச் சிறப்பித்துக் கூறுவார்.
- ✔ பந்தணை நல்லூர் பாணியை கட்டிக்காத்த இப் பேராசான் 1955 ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.

**(விடைக்கேற்ப புள்ளி வழங்கவும்.)**

**(12 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**6.** பின்வருவனவற்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.
(i) முத்திரை (ii) சிஷ்யன் இலட்சணம் (iii) அலாரிப்பு

(i) **முத்திரை**

ஒரு விடயத்தின் பொருளைக் கைகளின் உதவியினால் விளக்குவதே முத்திரை எனப்படும். அதாவது பொருளின் தோற்றம் உருவம் குறி என்பவற்றைக் கைகளினால் விளக்குவதே முத்திரையாகும். அம் முத்திரைகளின் பயன்பாடு நடனத்தில் முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. அதனால் அம் முத்திரைகள் “ஹஸ்தாபினயம்” என்று அழைக்கப்படுகின்றது. பரத முனிவர் காலத்திற்கு முன்னாலேயே இக் கலை நன்கு வளர்ச்சியடைந்திருக்க வேண்டும். வார்த்தைகள் எதுவும் பேசாமல் கைகளிலுள்ள விரல்களின் பல்வேறு நிலைகளாலும் அசைவுகளாலும் பொருள்பட அபிநயிப்பது இக் கலையாகும்.

நடனத்தில் பிரயோகிக்கும் கைகளை சமஸ்கிருதத்தில் ஹஸ்தங்கள் என்று அழைப்பர். தமிழில் “முத்திரைகள்” என்றும் அழைக்கப்படும். இவ் ஹஸ்தங்களை இரண்டாகப் பாகுபாடு செய்யலாம்.

அவையாவன :

i) அபிநய ஹஸ்தம் ii) நிருத்த ஹஸ்தம்

இவ் அபிநய ஹஸ்தம் மேலும் இரண்டாகப் பாகுபாடு செய்யலாம்.

அவையாவன :

i) ஒற்றைக் கை அல்லது அஸம்யுத ஹஸ்தம்

ii) இரட்டைக் கை அல்லது ஸம்யுத ஹஸ்தம்

இவற்றை முறையே இணையாத கை, இணைந்த கை எனவும் கூறலாம். அபிநயக் கைகள் கருத்துக்களைப் புலப்படுத்தவும் நிருத்தக் கைகள் நிருத்தத்திற்கு பயன்படுத்தவும் பயன்படும். ஹஸ்தங்கள் பற்றிக் கூறும்போது அஸம்யுத ஹஸ்தங்கள் 28 எனவும் ஸம்யுத ஹஸ்தங்கள் 24 எனவும் கூறப்படுகின்றது.

**(04 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

(ii) **சிஷ்யன் இலட்சணம்**

- ✔ நல்ல விஷயங்களைக் கிரகித்துக் கொள்ளல்.
  - நீர் கலந்த பாலில் பாலை மட்டும் உண்ணும் அன்னப்பட்சி போல
- ✔ ஆசானிடம் கற்ற வித்தையை மேலும் அபிவிருத்தி பண்ணுதல்
  - அற்பமான புல்லைத் தின்று அருமையான பால் தரும் பசு போல
- ✔ பிறருக்கு பயன்படுமாறு ஆற்றல் உடையவராயிருத்தல்.
- ✔ கள், கஞ்சா போன்ற போதை வஸ்துக்களை உட்கொள்ளாதிருத்தல்.
- ✔ சோம்பேறித்தனம், மந்த புத்தி, பயம், அசட்டுத்தனம், விதண்டாவாதம் இல்லாதிருத்தல்.
- ✔ மேற்குறித்த பண்புடையவர்களின் இலட்சணம் சிஷ்ய இலட்சணமாகும்.

**(04 புள்ளிகள்)**



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

(iii) **அலாரிப்பு**

- ✔ உருப்படி வரிசையில் 1 வது உருப்படி
- ✔ சுத்த நிருத்த உருப்படி
- ✔ உடலை மலராக நினைத்து கடவுளுக்கு அர்ப்பணம் செய்வது போல அமைந்த உருப்படி
- ✔ அங்க, பிரத்தியாங்க, உபாங்கங்களை பயன்படுத்தி செய்தல்
- ✔ ஐந்து ஜாதிகளிலும் இவ் உருப்படி அமைந்துள்ளது.
- ✔ தாம் திதா தெய் த தெய் எனும் சொற்கட்டுக்களுக்கு ஆடப்படும்.
- ✔ நாட்டை இராகத்திலும் திஸ்ர ஏக தாளத்திலும் அமைந்துள்ளது.

**(04 புள்ளிகள்)**

**(3 x 04 = 12 புள்ளிகள்)**

**விடைக்கேற்ப புள்ளி வழங்கவும்.**

Department of Examinations - Sri Lanka

7. (i) தொழில்சார் நடனங்களிலொன்றான 'தேயிலைக் கொழுந்து' நடனம் பற்றிப் பின்வரும் அடிப்படையில் எழுதுக.
   - அறிமுகம்
   - பாடல் அமைப்பு
   - ஆடல் அமைப்பு
   - ஆடை ஆணிகலன்கள்
   - பயன்படுத்தப்படும் இசைக் கருவிகள்

(i) • **அறிமுகம்**

- ✔ மலைப்பிரதேசத்தை வாழிடமாகக் கொண்ட தேயிலைக் கொழுந்து கொய்யும் தொழிலை மேற்கொள்ளும் மக்களின் வாழ்க்கை முறையை சித்தரித்துக் காட்டுவதாக அமையும்.

• **பாடல் அமைப்பு**

- ✔ உ + ம் : "எழுந்து வாங்கோ தேயிலைக் கொழுந்து கொய்ய மலை ஏறிடுவோம் காலைப் பனியும் பெய்ய" இவ்வாறு நடனத்திற்குப் பொருத்தமான பாடல்கள் எழுதியிருப்பின் புள்ளி வழங்கவும்.

• **ஆடல் அமைப்பு**

- ✔ தேயிலைக் கொழுந்தினைக் கொய்து கூடையில் போட்டு அதை பக்குவமாகத் தொழிற்சாலைக்குக் கொண்டு செல்வதை சித்தரிப்பதாக அமையும்.
- ✔ அவர்களது வாழ்வியல் துன்பங்களைப் பிரதிபலிப்பதாக ஆடப்படும்.
- ✔ கங்காணிமார், கணக்குப் பிள்ளை, தோட்டத்துரைமார் ஆகியோரின் ஆதிக்கம் பற்றியும் ஆடல் அமைப்பு பற்றியும் காணப்படும்.
- ✔ வளைந்து நெளிந்து மலையேறுவது போன்ற ஆடல் அமைப்பும் இடம்பெறும்.



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

- **ஆடல் அணிகலன்கள்**
  - ✔ பெண்கள் சாதாரண புடவை உடுத்தி இடையில் கம்பாயம் ஒன்று கட்டி இருப்பர்.
  - ✔ தலையில் கோணி (சாக்கு / உரப்பை) அணிந்திருப்பர்.
  - ✔ முதுகில் பிரம்பினால் பின்னப்பட்ட கூடை அணிந்திருப்பர்.
  - ✔ கையில் நீண்ட மூங்கில் குச்சி வைத்திருப்பர்.
  - ✔ கை நிறைய றப்பர் வளையல்களை அணிந்திருப்பர்.
  - ✔ கழுத்தில் முத்து மாலைகளை அணிந்திருப்பர்.
  - ✔ மூக்கில் மூக்குத்தி, நத்து அணிந்திருப்பர்.
  - ✔ காதில் சிமிக்கி, தோடு அணிந்திருப்பர்.
  - ✔ காலில் மெட்டி, காற்சங்கிலி அணிந்திருப்பர்.
  - ✔ ஆண்கள் சாரம் மேலங்கி அணிந்திருப்பதுடன் கவ்வாத்து வெட்டும் கத்தியும் வைத்திருப்பர்.
  - ✔ தோட்டத்துரைமார், கங்காணிமார், கணக்குப்பிள்ளை அரைக்காற்சட்டை, சேட், கோட், தொப்பி, அணிந்திருப்பர். அல்லது அரைக்காற்சட்டைக்குப் பதிலாக வேட்டி, சேட், கோட், தொப்பி அணிந்திருப்பர்.

- **பயன்படுத்தப்படும் இசைக்கருவிகள்**
  - ✔ தப்பு வாத்தியம்
  - ✔ ஹார்மோனியம்
  - ✔ தபேலா
  - ✔ சல்லாரி

**(05 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

(ii) நீர் பார்த்து இரசித்த 'தேயிலை கொழுந்து' நடனம் பற்றி விளக்குக.

- ✔ பாடசாலையில் நடைபெற்ற கலை விழாவில் தேயிலைக் கொழுந்து நடனம் ஆடப்பட்டது.
- ✔ பன்னிரண்டு மாணவிகள் பங்குபற்றியிருந்தனர்.
- ✔ கணக்குப் பிள்ளை ஒருவரும் பங்கு பற்றியிருந்தார்.
- ✔ பெண்களின் ஆடை செம்மஞ்சள் நிறத்தில் பாவாடையும் அதன் கீழ்க்கரை பச்சையாகவும் தாவணி பச்சை நிறத்திலும் அணிந்திருந்தனர்.
- ✔ இடுப்பில் கம்பாயம் கட்டி தலைக்குப் பின்னால் கூடையும் கட்டி முதுகில் தொங்க விட்டிருந்தனர்.
- ✔ தலையில் கோணி மாதிரி சாக்கினால் அணிந்திருந்தனர்.
- ✔ கையில் றபர் வளையல்களும் கழுத்தில் முத்து மாலைகளும் அணிந்திருந்தனர்.
- ✔ மூக்கில் மூக்குத்தி, நத்து அணிந்திருந்தனர்.
- ✔ காதில் சிமிக்கி, தோடும், காலில் சலங்கை, மெட்டி, காற்சங்கிலி அணிந்திருந்தனர்.
- ✔ பாட்டுப் பாடிய ஆசிரியர் நன்றாகப் பாடியிருந்தார்.
- ✔ பக்க வாத்தியங்களாக ஹார்மோனியம், தப்பு, சல்லாரி வாத்தியம் பயன்படுத்தியிருந்தனர்.
- ✔ கணக்குப் பிள்ளை செய்த சேஷ்டைகளுக்கு பெண்கள் காஞ்சோண்டி மாலை கட்டி போடுவதாகக் காட்ட கணக்குப் பிள்ளை ஓடித் துடித்துச் செய்தது மிகவும் ரசிக்கக் கூடியதாக இருந்தது.
- ✔ பெண்கள் மிகச் சிறப்பாக ஒத்திசைவதாக ஆடியிருந்தனர்.
- ✔ இடையில் ஒலி அமைப்பு சிறிது நேரம் தடங்கல் ஏற்பட்டது.
- ✔ எனினும் நட்டுவாங்கம் செய்த ஆசிரியர் (எமது நடன ஆசிரியர்) பாட்டு ஆசிரியர், பக்க வாத்தியங்கள் ஆடிய நடனமணிகள் விடாமல் தங்களது பங்களிப்பைச் செய்திருந்தனர்.
- ✔ சிறிது நேரத்தில் ஒலிவர சுமூகமாக நடனம் நடைபெற்றது.

**( 07 புள்ளிகள்)**

**( மொத்தம் 12 புள்ளிகள்)**

**மாணவரின் விடைக்கேற்ப புள்ளி வழங்கவும்.**

Department of Examinations - Sri Lanka


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/